தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(10) 1978-79 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டின் முதலாவது கூடுதல் மதிப்பீடுகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

2. வருவாய்க் கணக்குகளில் 15·89 கோடி ரூபாய்க்கும், மூலதனக் கடன் கணக்குகளில் 6.63 கோடி ரூபாய்க்குமாக, மொத்தம் 22·52 கோடி ரூபாய்க்கு கூடுதல் மதிப்பீடுகள் அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. பொதுவாக, இவற்றின் மூலம், நிதி ஒதுக்க மசோதா அங்கீகரிக்கப்பட்ட பின்னர், இந்த ஆண்டில் அரசால் ஏற்பளிக்கப்பட்ட, வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்படாத செலவினங்களுக்கு நிதி ஒதுக்கம் கேட்கப் பட்டுள்ளது.

3. நீர்த் தேக்கங்களில் மீன் வளர்ப்புப் பணிகளை மும்முரப்படுத்துவதற்காக, மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் மீனவர் மேம்பாட்டு நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. சிதம்பரம் தாலூக்கா, கிள்ளையில், 50 ஹெக்டேர் பரப்பில், 13 இலட்சம் ரூபாய் செலவில் உப்பு நீர் மீன் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் ஒன்று புதிதாக செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் டயஸ்கோரியா (Dioscorea) வளர்த்து அதிலிருந்து மருந்துச் சத்தைத் (Diosgenin) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இதற்காக இவ்வாண்டிற்கு வருவாய்க் கணக்கிலும் மூலதனக் கணக்கிலும் மொத்தமாக 10 இலட்சம் ரூபாய் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, 8 மாவட்டங்களில் மாவட்டத் தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன ; இவைகளுக்காக 78·62 இலட்சம் ரூபாய் செலவிற்கு அவையின் அனுமதி கோரப்படுகிறது. ஐம்பதாயிரத்திற்கும் குறைந்த மக்கள் தொகையுள்ள பகுதிகளில் தொடக்க

1978 செப்டம்பர் 8] [திரு. கி. மனோகரன்]

மூலதன உதவி (Margin money) அளிப்பதற்கான திட்டத்தை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. அரசு, இந்த நிறுவனத்திற்கு இதற்காக 20 இலட்சம் ரூபாய் கடனாக அளிக்க அவையின் ஒப்புதல் கோரப்படுகிறது. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் கீழ் இயங்கும் தஞ்சையிலுள்ள அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்கும், பெரம்பலூரிலுள்ள ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலைக்கும் 50 இலட்சம் ரூபாய் திருப்பிப் பெறும் முன்னுரிமை மூலதனமாகக் (Redeemable preference shar s) கொடுப்பதற்கும் அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

5. நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சாலைகளைச் சீரமைப்பது, ஒன்பது வட்ட மருத்துவ மனைகளில் குடும்ப நல அறுவைச் சிகிச்சைக்குப் பின் தங்குவதற்கான வார்டு (Wards) களும், அறுவை சிகிச்சைக் கூடங்களும் ஏற்படுத்துவது, கிராமக் குழந்தைகளுக்கு வழங்கும் படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது, நுகர்வோர் கூட்டுறவு இயக்கத்தைப் பலப்படுத்துவது போன்ற கிராமப்புற மக்களுக்கு பலனளிக்கும் திட்டங்கள் இம் மதிப்பீட்டினுள் அடங்கியுள்ளன. இம்மாநிலத்தில், பேருந்து விபத்துகளில் பாதிக்கப்பட்டோருக்கு நிதி உதவி அளிப்பதற்காக, முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதிக்கு 50 இலட்சம் ரூபாயை மாற்றவும் அவையின் அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதலாக ஐயாயிரம் விதவைகளுக்கு நிதி உதவி அளிப்பது, அரிசன மக்களுக்கு ஈமக் கடன்களுக்காக நிதி உதவி அளிப்பது போன்ற திட்டங்கள் சென்ற அவைத் தொடரில் அறிவிக்கப்பட்டன. இத்தகைய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடும் இந்த மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ளது.

6. சென்ற ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த பாசன ஆதாரங்கள், சாலைகள் இவற்றைச் சீர் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்காக இந்த மதிப்பீட்டில் 8·5 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை சரி செய்வதற்காக இந்த நிதி ஒதுக்கீட்டில், கடனாகவும், மானியமாகவும் ஒரு கோடி ரூபாய் கொடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

7. இத்துணை மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள சில முக்கிய திட்டங்களைப் பற்றி மட்டும் நான் குறிப்பிட்டுள்ளேன். இவற்றைப் பற்றிய விவரங்களும், மற்றுமுள்ள திட்டங்களைப் பற்றிய விவரங்களும், அவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெளிவாக்கப்பட்டுள்ளன. இந்த மதிப்பீடுகளுக்கு ஏற்பளிக்கும்படி அவையினரை வேண்டி அமருகிறேன்.